அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 03/ 2022

திருத்தணி நகராட்சி,
நாள்:31.03.2022

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ பங்குனி மாதம் 17–ஆம் நாள் (31.03.2022) வியாழக் கிழமை காலை 11.00 மணி அளவில் திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

B. Saraswathi
நகர மன்ற தலைவர்
திருத்தணி நகராட்சி.

**பொருள் எண்– 1**

அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை–9, அவர்களின் 15.09.2017–ம் தேதிய கடிதம் எண்.15537/UD1/2017–3–ல் தெரிவித்துள்ளபடி அரசால் விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் (திருத்தணி கிராமம் புல எண்.1 முதல் 322, 334 முதல் 364 வரை மற்றும் அகூர் குரூப்பில் அடங்கியுள்ள அமிர்தாபுரம் (புல எண்.1 முதல் 147 வரை) மற்றும் குமாரகுப்பம் (புல எண்.350 முதல் 382 வரை) உள்ள பகுதிகளை உள்ளடக்கிய திருத்தணி நகராட்சி / உள்ளூர் திட்ட குழும பகுதியினை இணைத்திட 15.09.2017–ம் தேதிய தீர்மானம் எண்.224–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 17.03.2022–ம் தேதிய நேர்முக கடித எண்.C1/11127/2017–3–ல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் திருத்தணி நகராட்சி பகுதியினை சென்னை பெருநகர் வளர்ச்சி பகுதியுடன் இணைக்க நகர மன்றத்தின் கருத்து பெற்று அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

சென்னை பெருநகர் வளர்ச்சி குழும பகுதியுடன் (திருத்தணி கிராமம் புல எண்.1 முதல் 322, 334 முதல் 364 வரை மற்றும் அகூர் குரூப்பில் அடங்கியுள்ள அமிர்தாபுரம் (புல எண்.1 முதல் 147 வரை) மற்றும் குமாரகுப்பம் (புல எண்.350 முதல் 382 வரை) உள்ள பகுதிகளை உள்ளடக்கிய திருத்தணி நகராட்சி / உள்ளூர் திட்ட குழும பகுதியினை இணைத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1517/2017/எப்1)